# பள்ளி நிகழ்வுகள்

## காமராசர் பிறந்தநாள்



காமாராசர் பிறந்தநாளான “மாணவர் தினம்” எங்கள் பள்ளியில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. விழாவின் ஒரு பகுதி மாணவர்களின் அறிவுத்திறனுக்கானதாகவும் இரண்டாம் பகுதி அவர்களது உடல் ஆரோக்கியத்தைப் பேனுவதற்கானதாகவும் திட்டமிட்டிருந்தோம்.

ஓவியப்போட்டி, பேச்சுப்போட்டி, கவிதைப்போட்டி நடைபெற்றது. அனைத்து ஆசிரியர்களும் போட்டிப் போட்டுக்கொண்டு காமராசர் பற்றி உரையாற்றினர்.

செவிலியர் பயிற்சிப்பள்ளியிலிருந்து வந்த செவிலியர்கள் மாணவர்களுக்கு இரத்தப்பரிசோதனையை மேற்கொண்டார்கள். யோகா நிகழ்வும் நடைபெற்றது.

**மா. மகேஷ்வரி,**
தொபஆ, அதொப,
மணவெளி (அ)

## குழந்தைகள் வாசிப்பகம்



நோனாங்குப்பம் ஆரம்பபள்ளியில் குழந்தைகளுக்கான வாசிப்பறையை ஜூலை 19 அன்று துவங்கினோம். படக்கதைகள், கதைகள் என விதம் விதமான குழந்தைகள் வாசிப்பு நூல்கள் இதில் இடம்பெற்றுள்ளன. தனி வகுப்பறையில் இது அமைந்துள்ளதால் கணித ஆய்வகத்தையும் இதனுடன் இணைத்து வைத்துள்ளோம். குழந்தைகள் வாசிப்பகத்தின் செயல்பாடு, மாணவர்கள் பயன்படுத்தும் விதம், அதனால் ஏற்படும் பலன்களை ஆசிரியர்கள் நாடகமாக நடித்துக்காட்டினர். இந்நிகழ்வில் DIS குமார் அவர்களும், VP நாகராஜ் அவர்களும் கலந்துகொண்டு சிறப்புறையாற்றினர். பெற்றோர்களும் இந்நிகழ்வுக்கு அழைக்கப் பட்டிருந்தனர். அவர்கள் தங்கள் குழந்தைகளுக்குக் கிடைத்த வாய்ப்பினைப் பற்றி மகிழ்ச்சியாக பகிர்ந்து கொண்டனர்.



**க. சுபாஷினி**
தொ.ப.ஆ அ. தொ.ப
நோணாங்குப்பம்

# விதைப் பந்து

ஜூலை 1 ஆம் தேதியன்று NCC மூலம் விதைப்பந்து செய்யும் நிகழ்வு ஏற்பாடு செய்திருந்தோம். முதல் நாள் மாணவர்களை விதை சேகரித்து வரும்படி கூறினோம். மாணவர்கள், முருங்கை, சவுண்டல், பாதாம், வேம்பு, புங்கன் என பல்வேறு விதைகளைக் கொண்டு வந்திருந்தனர்ஞ்



மனித நேயத்தின் சிறகுகள் அமைப்பிலுள்ள தன்னார்வலர்கள் விதைப்பந்து செய்யக் கற்றுக்கொடுக்க பள்ளிக்கு அழைத்திருந்தோம். அவர்கள் வரும்பொழுது சானி, தினை, மண் எடுத்து வைத்திருந்தனர். மாணவர்களுக்கு அவற்றை செய்து காட்டி அவர்களுடன் சேர்ந்து செய்யத் துவங்கினர். மாணவர்கள் இந்நிகழ்வில் ஆர்வமுடன் ஈடுபட்டனர். DIS அவர்கள் கலந்துகொண்டார்கள். பின்னர் இவ்விதைப்பந்தை 4, 5 வகுப்பு மாணவர்கள் அபிஷேகப்பாக்கம் குளக்கரையைச் சுற்றி தூவி விட்டனர்.

**து. சங்கர தேவி**
அ.தொ.ப அபிஷேகப்பாக்கம்

# உயர்நிலைப் பள்ளிக்கு தயார்படுத்துதல்

நடுநிலைப் பள்ளியிலிருந்து உயர்நிலைப் பள்ளிக்கு வரும் மாணவர்கள் தங்களை தயார்படுத்திக்கொள்ளுவதற்கான இரண்டுநாள் பயிற்சிப்பட்டறை நடைபெற்றது. இந்நிகழ்வு ஸிவிஜிகி திட்டத்தின் கீழ் ஜூலை 6, 7 ஆகிய இரண்டுநாள் நடைபெற்றது. மாணவிகளுக்கும் மாணவிகளின் பெற்றோர்களுக்கும் என தனித்தனியாகவும் சேர்த்தும் நடைபெற்றது. மாணவிகளுக்கு கல்வியில் ஆர்வத்தை ஏற்படுத்தவும், உடல் உள்ள விஜயங்களை புரிந்து கொள்ளவும் , ஆளுமையை வளர்க்கும் விதமாகவும் கருத்தாளர்கள் பேசினர். வளரும் வயதில் பெண்குழந்தைகளைப் புரிந்து கொள்ளவும், அவர்களது கல்வித்தேவைகளை அறிந்து உதவவும், மாணவிகளின் எதிர்காலத்தின் மீது நம்பிக்கை வைத்து செயல்படவும், இன்றைய சமூக சூழலுக்கேற்ப அவர்களை தயார்படுத்தவும் அறிவுறுத்தப்பட்டது. ராஜீவ்காந்தி அரசு மருத்துவமனையின் பெண்கள் நல மருத்துவர், மீனா. மக்கள், சமூக மேம்பாட்டு நிறுவனத்தின்,கீழ் செயல்படும் குடும்பநல ஆலோசனை மையத்தின் துணைச் செயலர், பரமேஷ்வரி மற்றும் ஆலோசகர்கள் அகிலா, கலைத்தமிழ் ஆகியோர் கலந்துகொண்டு மாணவிகளுக்கு கருத்துக்களை வழங்கினர். மாணவர்களுக்கு பயன்படும்படியான வகையில் இத்திட்டத்தை துணை முதல்வர், தலைமையாசிரிய மற்றும் ஆசிரியர்கள் முன்னெடுத்துச் சென்றனர்.



**ந பச்சையம்மாள்.** TGT
அ.பெ.மெ.ப, காலாப்பட்டு

# அப்துல்கலாம் நினைவுநாள்

முன்னால் குடியரசுத் தலைவர் டாக்டர்.ஏ.பி.ஜே.அப்துல்கலாம் அவர்களின் நினைவு நாளில் அசிரியர்கள் அவரின் வாழ்க்கை வரலாறு மற்றும் சாதனைகள் பற்றி உரையாற்றினர். மாணவர்கள் அவரைப் பற்றிக் கவிதைகள் எழுதி வாசித்தனர். அவரின் வாழ்க்கை வரலாறு கூறும் குறும்படம் ஒன்றைத் திரையிட்டுக் காட்டினோம்.





**த. கெஜலட்சுமி,** தொ.ப.ஆ,
அ.தொ.ப., கரிக்கலாம்பாக்கம்

# பிரவேச உட்சவ்



12/06/2017 திங்கள் காலை பிரவேச உட்சவ் எம் பள்ளி துணை ஆய்வாளர் திரு.M.G. இராபர்ட் கென்னடி அவர்களின் வாழ்த்துக்களுடன் விழா இனிதே ஆரம்பிக்கப்பட்டது. குழந்தைகள், ஆசின்யர்கள், பெற்றோர்கள், SMC உறுப்பினர்கள், PTA உறுப்பினர்கள், பணியாளர்கள், ஊர்ப் பொதுமக்கள் அனைவரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்

பக்கத்திலிருந்த கோயிலிருந்து பள்ளிக்குத் தேவையான பாடப்புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், பேனா, பென்சில், ஸ்கேல் போன்ற எழுது பொருட்கள், வெள்ளைத் தாள்கள், விண்ணப்பப் படிவங்கள், வருகைப் பதிவேடு, பால், சர்க்கரை, கற்கண்டு, இனிப்புகள், பழங்கள், மலர்கள், மருந்துப்பொருள்கள், பள்ளிச் சுத்தம் செய்யும் பொருட்கள் என அனைத்தும் தட்டு வர்சையாக வைக்கப்பட்டுப், பின்னர் பெற்றோர்கள் அவற்றைச் சீர் வர்சையாக எடுத்துவந்தனர்.

ஆசின்யர்கள் குழந்தைகளுக்கு சந்தனம், குங்குமம் வைத்து, பன்னிர் தெளித்து, பூ மற்றும் இனிப்புகள் கொடுத்து இன்முகத்துடன் பள்ளிக்குள் வரவேற்றனர். பெர்ய பானையில் சர்க்கரைப் பொங்கல் வைக்கப்பட்டு அனைவருக்கும் வழங்கப்பட்டது.

**மு. சாந்தகுமாரி,** த.ஆ
அ.தொ. ப., வடுவக்குப்பம்

## Students' Day

Kamarajar's birth anniversary was celebrated in collaboration with the Literary Association Puducherry Padaippalar Iyakkam. Competitions were conducted and prizes were distributed. Seed balls prepared by our students were presented by them to the participants. A photo exhibition on the life history of Perunthalaivar Karamarajar was arranged by the school for the parents and public to visit.





**தனவந்தினி,** தொ.ப.ஆ,
அ.ந.ப., நல்லவாடு

## மாணவர் தின விழா





தலைமையாசின்யர் திருமதி மு.சாந்தகுமான் அவர்கள் மாணவர் தின நோக்கம், சிறப்பு மற்றும் கர்மவீரர் காமராசர்ன் அருமை பெருமைகளை விளக்கி மாணவர் தின நல்வாழ்த்துக்களைத் தெர்வித்தார்.

தொடர்ந்து கராத்தே மாஸ்டர் செல்வன் கதிரவன் 'தற்காப்புக் கலையின்' இன்றியமையாமை, பயன்பாடு, எப்பொழுது பயன்படுத்துவது போன்றவற்றைக் கூறி, சில எளிய பயிற்சிகளை மாணவர்களுக்குப் பயிற்றுவித்தார்.

நிலா கலை பண்பாட்டுத் துறை திரு. மணிகண்டன் அவர்கள் பாடல்கள் பாடி குழந்தைகளுக்குக் காமராசர்ன் பெருமை, சிறப்பு, சுத்தம், சுற்றுப்புறச் சுகாதாரம், சுற்றுச் சூழல் போன்றவை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தினார்.

துப்புரவுப் பணியாளர்களின் தியாகப் பணியைப் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

தொடர்ந்து மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் மற்றும் கவிதை எழுதுதல், வரைதல், பேச்சுப்போட்டி, வினாடி வினா போன்ற பல போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பர்சுவழங்குதலும் நடைபெற்றது

**மு. சாந்தகுமாரி,** த.ஆ
அ.தொ. ப., வடுவக்குப்பம்